## சுருக்கம்


பள்ளிக்கல்வி – அறிவிப்புகள் – 2025–2026–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்பு எண். 11 – **"அரசுப் பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த மாணவர்களை அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக (School Ambassadors) நியமிக்க"** அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.


---

பள்ளிக்கல்வித் (பக5(1)) துறை

**அரசாணை (நிலை) எண்.112**

**நாள்:15.05.2025.**
**திருவள்ளுவர் ஆண்டு 2056,**
**விசுவாவசு வருடம், வைகாசி–1.**

**படிக்கப்பட்டவை :–**

1. மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.11, நாள்.25.04.2025.
2. பள்ளிக்கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.025232/எம்1/இ1/2025, நாள். 08.05.2025.

********

**ஆணை**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.11–இல் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> **"அரசுப் பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த மாணவர்களை அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக (School Ambassadors) நியமித்தல்.**
>
> பள்ளிகளின் தரமும் செயல்பாடுகளும் அப்பள்ளியில் பயின்ற மாணவர்களின் தற்போதைய நிலையினைக் கொண்டே முடிவு செய்யப்படுகிறது. ஆகவே சமூகத்தில் உயரிய நிலையில் உள்ள முன்னாள் மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக நியமிக்கப்படுவர்.
>
> Students of Government schools who have achieved extraordinary success will be appointed as "School Ambassadors."

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதத்தில், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்


Scanned with OKEN Scanner

2025-2026-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு வரிசை எண்.11-இல் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பள்ளிகளின் தரமும் செயல்பாடுகளும் அப்பள்ளியில் பயின்ற மாணவர்களின் தற்போதைய நிலையினைக் கொண்டே முடிவு செய்யப்படுகிறது. ஆகவே சமூகத்தில் உயரிய நிலையில் உள்ள முன்னாள் மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக நியமித்தல் குறித்து, தூதுவர்களை நியமிப்பதன் நோக்கம், தூதுவர்களை தேர்ந்தெடுத்தல் குறித்து பின்பற்ற வேண்டிய கீழ்க்காணும் நெறிமுறைகளுடன் அரசின் அனுமதி கோரியுள்ளார்.

**பள்ளியின் தூதுவர்கள்:**

(i) அரசுப் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியாக ஜனவரி 9, 2024 ஆம் ஆண்டு "விழுதுகள்" என்ற முன்னெடுப்பு தொடங்கப்பட்டது. அதனை தொடர்ந்து இதுவரை 8.5 இலட்சம் முன்னாள் மாணவர்கள் தங்கள் பள்ளியுடன் இணைந்துள்ளனர்.

(ii) மாணவர்களுக்கு சமூக நீதி, சமத்துவம், அறிவியல் பார்வை ஆகியவற்றை நிறைவேற்றும் பொறுப்பில் நமது தமிழ்நாடு அரசும் அரசுப் பள்ளிகளும் என்றுமே முன்னிற்கிறது. அதன் சான்றாக, நம் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் இன்று உலகெங்கும் பல்வேறு துறைகளில் முக்கிய பொறுப்புகளில் பணிபுரிகின்றனர்.

(iii) நூற்றாண்டுகளாகத் தொடரும் சமூகநீதிப் பயணத்தின் தொடர்ச்சியாக, அரசுப் பள்ளியில் பயின்று தங்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேறி, பணிபுரியும் துறை மற்றும் சமூகத்தின் மாற்றத்திற்காக செயல்படும் முன்னாள் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அப்பள்ளியின் தூதுவர்களாக நியமிக்க மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிப்பு செய்யப்பட்டது.

**நோக்கம் :**

அரசுப் பள்ளியின் அனைத்து பங்காளர்களும் ஒருங்கிணைந்து தங்கள் பள்ளி மற்றும் மாணவர்களின் மேம்பாட்டிற்கான பொறுப்பை ஏற்கும்போது பள்ளியின் முழுமையான முன்னேற்றம் சாத்தியமாகும். குறிப்பாக, நிலையான பங்காளர்களான முன்னாள் மாணவர்கள் பள்ளியுடன் இணைந்து செயல்படுதல் அப்பள்ளிக்கு கூடுதல் பலம் சேர்க்கிறது. எனவே அதனடிப்படையில்,

(i) அரசு பள்ளிகளில் பயின்று பல துறைகளில் சிறந்து விளங்கும் முன்னாள் மாணவர்களை பள்ளித் தூதுவர்களாக நியமிப்பதன் மூலம் மாணவ சேர்க்கை, இடைநிற்றலை தவிர்த்தல், மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டுதல், விளையாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, கலைத் திருவிழா, சிறார் திரைப்படம் திரையிடுதல், மகிழ் முற்றம், வாசிப்பு இயக்கம், வானவில் மன்றம் போன்ற செயல்பாடுகளை

Scanned with OKEN Scanner

மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தெரிவித்து பங்கேற்க ஊக்குவித்தல்.

(ii) அரசுப்பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களான காலை உணவுத் திட்டம், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வங்கள், திறன் வகுப்பறைகள், அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் உயர் படிப்புகளில் 7.5%, உயர்கல்வியை ஊக்குவிக்கும் புதுமை பெண், தமிழ் புதல்வன் போன்ற அரசின் சாதனை திட்டங்களை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தெரிவித்திடவும் அரசுப்பள்ளியின் மீது மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்திடவும், அரசுப் பள்ளியை நோக்கி மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும் முன்னாள் மாணவர்களை பள்ளித் தூதுவர்களாக (School Ambassadors) நியமித்தல்.

(iii) அனைத்து பங்காளர்களையும் ஒருங்கிணைக்கும் நபராகவும், அவர்களை பள்ளியின் வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகளில் செயல்பட ஊக்குவித்தல்.

(iv) பள்ளியின் தூதுவர்கள் அப்பள்ளியின் செயல்பாடுகளை, தேவையை கருத்துக்களை அனைவருக்கும் பகிரும் அப்பள்ளியின் முக்கிய பிரதிநிதியாக செயல்படுதல்.

(v) பள்ளியின் தூதுவர்கள் அப்பள்ளியின் உட்கட்டமைப்பு மற்றும் பிற தேவைக்காக பெருநிறுவன சமூகப் பொறுப்பு நன்கொடைகள். முன்னாள் மாணவர்கள் நன்கொடைகள் போன்றவற்றை ஒருங்கிணைத்தல் போன்ற முயற்சிகளில் ஈடுபடுதல்.

(vi) பள்ளியின் தூதுவர்கள் அப்பள்ளியின் மாணவர்களுக்காக அனைத்து வகையான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.

(vii) தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு பள்ளியின் தூதுவர்கள் கல்வி சார்ந்த செயல்பாடுகளில் உறுதுணையாக இருத்தல்.

**<u>பள்ளியின் தூதுவர்களை தேர்ந்தெடுத்தல் சார்ந்து பின்பற்ற வேண்டிய செயல்பாடுகள் :</u>**

(i) நூற்றாண்டு பள்ளிகள் உட்பட 6000 பள்ளிகளில் முதற்கட்ட முயற்சியாக அப்பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த முன்னாள் மாணவர்களை அப்பள்ளியின் தூதுவர்களாக தேர்ந்தெடுத்தல்.

(ii) தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் அப்பள்ளியில் பயின்று, தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேறி. பணிபுரியும் துறை மற்றும் சமூகத்தின் மாற்றத்திற்காக செயல்படும் முன்னாள் மாணவர்களை அப்பள்ளியின் தூதுவர்களாக பதிவு செய்ய ஊக்குவித்தல் மற்றும் பதிவு செய்த முன்னாள் மாணவர்களின் பட்டியலை தயாரித்தல்.

Scanned with OKEN Scanner

(iii) வழிகாட்டு நெறிமுறைகளின் படி பதிவு செய்த முன்னாள் மாணவர்களின் பட்டியலிருந்து அப்பள்ளியின் தூதுவர்களை பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் இணைந்து அப்பள்ளிக்கான தூதுவர்களை தேர்வு செய்தல்.

(iv) பள்ளியின் தூதுவர்களுக்கான தொடர்ச்சியான செயல்பாடுகள் மற்றும் பயிற்சிகள் "விழுதுகள் செயலி" வாயிலாக ஒருங்கிணைத்தல்.

3. மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் 2025-2026-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு வரிசை எண்.11-இல் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, பள்ளியின் தூதுவர்களை நியமிப்பதன் நோக்கம், தூதுவர்களை தேர்ந்தெடுத்தல் குறித்து பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளுடன் கூடிய பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, **"பள்ளிகளின் தரமும் செயல்பாடுகளும் அப்பள்ளியில் பயின்ற மாணவர்களின் தற்போதைய நிலையினைக் கொண்டே முடிவு செய்யப்படுகிறது. ஆகவே சமூகத்தில் உயரிய நிலையில் உள்ள முன்னாள் மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக நியமனம் செய்ய"** அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன் .B,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.

**நகல்**

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச்செயலாளர், சென்னை-9.
பள்ளிக்கல்வி (வ.செ.)த் துறை, சென்னை-9.
பள்ளிக்கல்வி (அநமு)த் துறை, சென்னை-9. (பள்ளிக்கல்வித் துறை
இணையதளத்தில் பதிவேற்றுவதற்காக)
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
15/05/2025

Scanned with OKEN Scanner